தனுஷ்கோடி வரலாற்றுச் சுவடுகள்

திரு.பக்ஷி சிவராஜன்
இலக்கிய ஆராய்ச்சியாளர், புரோகிதர்
இராமேஸ்வரம்



Map of 1789

தனுஷ்கோடி என்பது இராமேஸ்வரம் தீவில் தென் கிழக்கு மூலையில் அமைந்- துள்ளது. தமிழ் நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ராமேஸ்வரத்தில் இருந்து 25 கிமீ தொலைவில் உள்ள சிறிய கடற்கரை கிராமம் 'தனுஷ்கோடி', அதன் பெயரைப் போலவே தமிழகத்தின் அல்லது இந்தியாவின் கடைக் கோடியில் உள்ளது என்று கூட கூறலாம். இங்கிருந்து இலங்கை வெறும் 15 கிமீ மட்டுமே தூரமே. வில்லைப் போன்று வளைந்த கடற் கரையைக் கொண்டிருப்பதால் இதனைத் தனுஷ்கோடி என்றனர், கோடி என்பது முனை. வானைத் தொடும் முனை 'கோடு'. அதுபோலக் கடலில் அமைந்துள்ள நிலமுனை இந்தக் 'கோடி'. கோடி என்பது இதன் சங்ககாலப் பெயர். 'தொன்முது கோடி' என்று அது சிறப்பிக்கப்பட்டுள்ளது. தனுஷ்கோடியையும், இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் இராமர் கட்டியதாக கருதப்படும் இராமர்பாலம் இன்றும் காணப்படுகிறது

தனுஷ்கோடியின் வரலாற்றுச் சுவடுகள் மிக நீண்ட, நெடிய புகழ் பெற்ற வரலாறாகும். ஒரு காலத்தில் மதுரை மாகாணத்திலேயே அதிக பொருளாதார வளமிக்க பகுதியாக இருந்திருக்கிறது. இது ஏதோ பிரிட்டிஷ் அரசு காலத்தில் இருந்து இது மிகச் சிறந்த வணிகத்தலமாக இருந்ததாக அறியப்படுகிறது. ஆனால் அதற்கு முன்பிருந்தே அது மிகச் சிறந்த வியாபாரதலமாக இருந்து வந்திருக்கிறது. கடந்த இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றில் எல்லா சாம்ராஜ்யங்களிலும் மிகப் புகழ் பெற்ற வியாபார ஸ்தலமாக தனுஷ்கோடி விளங்கியிருக்கிறது.

வரைபடங்கள்

கீழே உள்ள வரைபடங்களில் தனுஷ்கோடி எப்படி குறிக்கப்பட்டுள்ளது என்பதை பார்க்கலாம்.

It is a 1743 map and in fact the entire Rameswaram is known Ramancoil 1 as per this map

This is 17th century map and you may note that the Dhanushkodi is known as dhankotty as per this map.



This is another old map and it is ceylons map and you note that Madurai is known as Singa as per this map.



இது இன்னொரு பழைய படம்

இது பிரிட்டிஷ் கால பழைய படம்

இது மன்னார் மாவட்ட வரைபடத்தின் ஒரு பகுதி இதில் சேது பாலம் மிகத் தெளிவாக தெரியும்



இது ஒரு வெளிநாட்டு வரைபடம் தனுஷ்கோடியில் இருந்து மன்னார் செல்லும் வழி தெரிகிறது

சர்வதேச அரங்கில் மிகப் பெரிய அளவில் முக்கியத்துவம் வணிக ரீதியாக தனுஷ்கோடிக்கு கொடுக்கப்பட்டுள்ளது மிகத் தெளிவாக தெரிகிறது. தற்சமயம் சுதந்திரத்திற்கு பின் உள்ள தனுஷ்கோடியின் வரைபடம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.





இதுவும் வணிக ரீதியாக கடல்வழி மற்றும் ரெயில் வழியில் மேன்மை பெற்று விளங்கிய தனுஷ்கோடியை நம்மால் பார்க்க முடிகிறது.

வரலாற்றுச் சிறப்புகள்

இந்த தனுஷ்கோடியில் பெருங் கற்கால மனிதர்கள் வாழ்ந்ததாக சொல்லப்படுகிறது. அதற்கு சான்றாக இங்கே முன்பு நிறைய கற்குகைகள் அமையப் பெற்றிருந்தன. காலப் போக்கில் சமுத்திர சீற்றங்களால் மூழ்கடிக்கப் படிக்கப்பட்டன. அதே போன்று கடல் உள் செல்லும் போது அதன் படிமங்களை இப்போதும் காணலாம்.

தனுஸ்கோடி செல்லும் வழியில் இரட்டைதலை முனீஸ்வரர் கோயில் ஒன்று இருக்கிறது அங்கே ஒரு கல்வெட்டு கிடைத்தது. அதை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் திரு. இராஜாராமன் என்பவரிடம் படம் அனுப்பி காண்பித்தபோது இது ஒன்பது நூற்றாண்டை சேர்ந்தது என்றும். அதில் பொறிக்கப்பட்டுள்ளது என்னவென்றால் “முன்னூற்றுவர் களஞ்சியர் திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிக கூட்டத்தால் செய்த தர்மகாரியத்தை குறிக்கிறது” இது பாண்டியர் காலத்தை ஒத்ததாக தெரிகிறது.

இரட்டைத்தலை முனீஸ்வரர் கோயில் கல்வெட்டு - ஒன்பதாம் நூற்றாண்டு கல்வெட்டு

இதை நமது தொல்பொருள் துறையினரிடம் மனு கொடுத்து ஆராய கோரியுள்ளோம் இன்னும் மனு பரிசீலனையில் இருக்கிறது.



மெயில் பிரதி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது

இந்த காலத்தில் இராமேஸ்வரம் என்ற பெயர் வழங்கப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு புராதன கல்வெட்டு சான்று இது. இது இல்லாமல் இலக்கிய ஆதாரங்கள் பல உள்ளன. கீழே தேவாரம் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது

1.🔔திரிதரு மாமணி நாகமாடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக்க வெரியேந்தி யாடு நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்த மிலங்குகான லிராமேச் சுரமேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி விமலர் செயுஞ்செயலே.

🙏அரிய மாணிக்கங்களையுடைய நாகங்களைப் படமெடுத்து ஆடுமா
தம் உடலில் அணிந்துள்ளவர் சிவபெருமான். அவர் மகாசங்கார
காலத்தில் நரிகள் ஊளையிடும் சுடுகாட்டில் நெருப்பேந்தி நடனம்
செய்வார். மிக்க ஒளியுடைய முத்துக்கள் விளங்கும் சோலைகள் சூழ்ந்
இராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற
ஒளிக்கதிர் வீசும் வெண்மையான பிறைச்சந்திரனைச் சடைமுடியில்
தரித்த, இயல்பாகவே பாசங்களின் நீங்கியவரான சிவபெருமானின்
அச்செயல், உயிர்கள் இளைப்பாறும் பொருட்டுச் செய்யப்படும்
அருட்செயல் என்பதை உணர்ந்தவர்களே மெய்ஞ்ஞானிகள் ஆவர்.

இரட்டைதலை முனீஸ்வரர் சமஸ்கிருதத்தில் சிம்ஹக்னர் என்று அழைக்கப்படுகிறார். அவரது கோயில் புகைப்படமும் வேதகால புகைப்படமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ரெட்டைத்தலை முனீஸ்வரர்

சிம்ஹக்னர்

தனுஷ்கோடியில் கிடைக்கும் அபூர்வங்கள்

வலம்புரி சங்கு

இங்கே வலம்புரி சங்குகள் அதிகமாக கிடைத்து வந்துள்ளன. அதிலும் குறிப்பாக திரிசங்கு என்று சொல்லக்கூடிய மூன்று வலம்புரி சங்குகளின் முக்கூட்டாக ஒன்றாக இருக்கக்கூடிய அரியவகை சங்குகள் இங்கே கிடைத்துள்ளன. தற்சமயம் டிராலர் உபயோகம் மற்றும் பிற இயற்கை கட்டமைப்பு மாற்றத்தாலும் இங்கே கிடைப்பதில்லை. உலகிலேயே திரிசங்கு உள்ள ஒரே இடம் தற்சமயம் இராமநாத சுவாமி திருக்கோயில்தான். அதன் படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திரி வலம்புரி சங்கு

அற்புத இந்த சங்கு காணக் கிடைக்காதது. இராமநாத சுவாமிக்கு சங்காபிஷேகம் செய்யும்போது, இதை வெளிக்கொண்டு வருவார்கள்.

கருப்பு முத்து

தனுஷ்கோடியில் கிடைக்கக் கூடிய இன்னொரு அரிதான பொருள் கறுப்பு முத்துக்கள். விலை மதிப்பற்றது இந்த கருப்பு முத்து. வைரத்தை விட அதிக விலை பெறக்கூடியது. தற்சமயம் இங்கிலாந்து எலிசபெத் ராணி அவர்கள் அழகாக இந்த கருப்பு முத்துமாலை அணிந்திருப்பார்கள். இது இந்தப் பகுதியின் சிறப்பம்சமாகும்.

ஒரிஜினல் கருப்பு முத்து

முத்துக்குளித்தல்

முத்துக்குளித்தல் என்பது மிகச் சிறப்பான தொழிலாக தனுஷ்கோடியில் விளங்கியுள்ளது.

அடுத்த மாதம் தனுஷ்கோடியின் வரலாற்றுச் சம்பவங்களை நூற்றாண்டு வாரியாக பார்ப்போம்.